




ஓலை 122| ஓசை 245| மே 2025

# அகர முதல இலக்கியப் பேரவை



‘மொழிஞாயிறு’ தேவநேயப் பாவாணர்

## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ ம ] சிவம் அறக்கட்டளை

# திருக்குறள்

## குறள்

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் தரூஉம் பகை.

## பொருள்

குற்றமே ஒருவனுக்கு அழிவை உண்டாக்கும் பகையாகும், ஆகையால் குற்றம் செய்யாமல் இருப்பதே நோக்கமாகக் கொண்டு காத்துக் கொள்ள வேண்டும்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய
9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

நிறுவனர்

**செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்**

ஆசிரியர்கள்

**அ.வில்சன்**
**குமர.தர்மசீலன்**

வடிவமைப்பு

**ச.சூர்யா, அ.வில்சன்**

அலுவலக முகவரி


97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.


# அகர முதல இலக்கியப் பேரவை


Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

## பஃறொடை வெண்பா

ஆதி மனிதனோ அன்பே கடவுளெனல்
பீதி நீங்கிடப் பெற்ற இயற்கையின்
சோதியைப் பார்த்தே சுடர்தனை ஏற்றியே
சாதியே இல்லையெனச் சாற்றியே நின்றிடப்
பாதியில் வந்தோர் பதமாய் புகுத்திய
சாதி நிலைத்திடச் சாத்திரம் கூறவே
ஏதிலராய் நின்றதை எண்ணு.



கவிஞர் செ. கலைவாணி

*பா வகை* -நிரையசைக் கட்டளைக் கலித்துறை

கேடுமே செய்தலே தேடியே கொல்லும் கேட்டிடுவாய்
கூடுமே உள்ளம் குறைமதி இல்லா குணமிருந்தால்
ஓடுமே துன்பம் ஒருவழிப் பாதையில் ஒன்றுபட்டால்
நாடுமே என்றும் நலமே உனையும் நனிமகிழ்வாய்

அல்லவை செய்தால் அறமுமே தேய்ந்தே அழிந்திடுமே
நல்லவை செய்தலே நாளும் உனக்கே நலம்வருமே
புல்லினம் கூட பெரும்பணி ஆற்றப் பிறந்திடுதே
கல்லதும் போலவே நில்லா அறத்தைக் காத்திடுவோம்



கவிஞர் விஜயலஷ்மி காளிதாசன், கோவை மாவட்டம்

சமத்தாகவே இருக்கிறது
சித்திரத்தில்
சாம்பல் நிறப்பூனை.
சித்திரப்பூனையைப் பார்த்து
சித்திரக்காரன்
வீட்டு எலிக்கு
அளவில்லா ஆனந்தம்.
திடீரென்று சித்திரப்பூனை
உயிர்ப்பெற்று
எலியைத் தாவிப்பிடிக்க
முயல்கிறது.
பூனையின் வருகையை
அறிந்த எலி
சட்டென மாறிவிட்டது
சித்திரமாய்.



கவிஞர் பாரியன்பன் நாகராஜன், குடியாத்தம்

# வெயில்

மண்ணில் உயிர்க்கு மாண்புறு ஞாயிறு
மகிழ்ந்து தந்திடும் வளமே வெயில்!
உடலின் வெப்பத்தில் உயிரும் இயங்கும் ;
கடந்து போனால் இறப்பும் நேரும்!

வெயிலில் ஓங்கும் வெப்பம் அளவே
ஒயிலாம் மழையின் ஒங்கும் கருணை!
வேர்களும் வரண்டு மிகநீண்டு நீர்தேடும் ;
ஊர்மாந்தர் வயிறார உண்ணவே மண்துளைக்கும்!

வெயில் கொடுமை விளைநிலத்தில் வெடிப்புக்கள் ;
உழைப்போர் உதட்டிலும் வெடிக்கும் புண்கள்!
பழகிப் போன பாட்டாளி பொருட்படுத்தான்;
விலகிப் போன சொகுசுக்காரன் தாளான்!

அரசியல் கட்சிகளின் ஆடம்பர தர்பூசனி மோர்பந்தல்;
அரைமணி நேரம் கழிந்தால் தண்ணீர் கலன் மட்டுமே!
இளம் வெயிலில் உடலும் இதமாய் இயங்கும்;
உளமும் மகிழ்வாய் ஒன்றிச் செய்யும்!

உச்சிவெயிலில் சிந்தும் வேர்வைத் துளிகள்;
உணர்வுகளின் எரிச்சல் பேச்சில் வழியும்!
மாலை வெயிலில் மாந்தர்பலர் நடத்தல் உண்டு;
மலரும் நினைவினைப் பகிர்ந்து மகிழ்வதுண்டு!

கத்திரி வெயில் உடல் நலக் கேடு;
களப்பணி செய்யின் மருத்துவம் மிகும்!
வெயில் காலமும் மழை நேரமும் உழைப்போர் விரும்பும் நேரமே ;
உழைக்கும் வயதில் உடலும் மனமும் ஒத்துழைப்பின் நன்றே !



கவிஞர் ஆ. சு. கந்தன், திருவொற்றியூர்

# புகைவண்டிப் பயணம்

பயணம் பலவாயினும் பரவசம் அடைந்தோம்
ஜன்னல் ஓரத்தில் ஜரிகையும் காற்றிலாட
குளுகுளுவெனக் காற்றும் மனதை மயக்கிட
கண்கள் இரண்டும் நித்திரையில் சொக்கிட
அலைபேசியில் கானங்கள் ஒலித்திட  மனமும்
மயக்கம் அடைய சுகமான சுமைகளும்
அறியாது இயற்கைக் காட்சியையும் இரசித்து
உறவுகளோடு சென்றது உல்லாசப் பயணம்.



கவிஞர் ம. செ. அ. பாமிலா பேகம், நாகர்கோவில்

7. கனகமாலையார் இலம்பகம்

''பழம்பகை நட்பு ஆதல் இல''
எழும்பிய அலையில் சிக்கிய மீன்
விழுந்து செத்து மடிவது திண்ணம்
இழந்த அரசை மீண்டும் அடைவோம்.''

''ஒரு திங்கள் பொறுங்கள் தாயி
திருவாளர் சீவகன் உங்களிடம் வருவான்
அருமை நண்பன் தேடிச் செல்கிறோம்
வரும்வரை கவலை அற்று இருங்கள்''

"நீங்கள் சொல்லியபடி காத்து இருக்கிறேன்
எங்கு இருந்தாலும் மகனைக் காணுங்கள்
இங்கு எதிரியின் கண்ணில் படாமல்
தங்கி இருக்கிறேன் என்று கூறுங்கள்"

அவளிடம் விடைபெற்று புறப்பட்டனர்
தவப்பள்ளியில் தாயை விட்டுச் சென்றனர
அவர்கள் ஏமமாபுரம் வந்துசேர்ந்தனர்
சீவகன் இருக்கும் இடம் எது?

ஒற்றன் ஒருவன் உதவி கிடைத்தது
மற்றவர்களை சோலையில் தங்க வைத்தான்
ஒற்றன் இரகசிய இடங்களை ஆய்ந்தான்
சற்றும் எதிர்பாராமல் செய்தியுடன் வந்தான்

நந்தட்டனுடன் சீவகன் உள்ளதை அறிந்தனர்
வந்த இடத்தில் சீவகன் மறைந்து வாழ்கிறான்
எந்த உண்மையும் கூறாமல் திருமணம்
அந்த அரசன் மகள் மணமகள்

துணைவி கனகமாலைக்கும் எதுவும் தெரியாது
தனயனின் நண்பன் சிறந்த வில்லாளி
துணையாக இருக்கும் சகலகலாவல்லபன்
நினைவில் நிற்கும் இசைக் கலைஞன்



மாவீரர்கள் சீவகன் நான்கு தோழர்கள்
தாமாக நண்பனைத் தேடி அலைகிறார்கள்
சாமர்த்தியமாக யோசித்து முடிவுக்கு வந்தார்கள்
நாட்டில் ஆனிரைகள் சிறை பிடித்தனர்

சினத்துடன் அரசன் சீவகனை நாடினான்
தனக்கு நேர்ந்த இன்னலைக் கூறினான்
உடன் சென்றான் பெரும்படையுடன் சீவகன்
சட்டென கண்டனர் சீவகனை வீரனாக

''அடியேம் நின்னைக் காண வந்தோம்
துடிப்போடு அவனிடம் சென்று சேர்ந்தனர்
நடித்தது போதும் தன்படை விலக்கினான்
விடிந்ததும் வந்துவிடு எங்களுடன்,''என்றனர் '

தொடரும்...

கவிஞர் ந. திருக்கோமு

மங்கையராய் பிறப்பதற்கே
நல்ல மாதவம் செய்திருக்க வேண்டுமாம்.
மாதவம் செய்து பிறந்ததெல்லாம்
மானபங்கப்பட்டு அழிந்திடத் தானா?
பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்தாராம்
புவி பேணும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்
மானம் மட்டுமே பெண்மை என்றர்
எங்களை அடக்கிடத்தானா?
திரௌபதிக்கு ஆடை கொடுத்துக்
காத்தாராம் கண்ணன்.
இன்று இவள் ஆடையை அவிழ்க்கையில்
ஒரு கண்ணன் கூட அங்கில்லையா ?
கூறிய,கூறும் கட்டுக்கதைகளை எல்லாம்
கேட்டு வீட்டுக்குள் கட்டுண்டு கிடந்ததெல்லாம் போதும்.
கட்டிப்போடும் மடமை கொண்ட
சில கலாச்சாரக் கருத்துக்களை
காப்பாற்றிய காலமெல்லாம் போதும்.
பெண்ணுக்கு பெண்ணே எதிரியாய் நின்று
நடை, உடை,பாவனை என்று
பழித்து பயமுறுத்தியது போதும்.
பாதுகாக்கும் ஆண் இனம்
என்ற பகல் கனவும் போதும்.
ஜாதிச் சண்டை, மதச் சண்டை,
நாட்டுச் சண்டை, ஓட்டுச் சண்டை
என காரணம் நூறு சொல்லி
உன்னை இரையாக்க வரும் அனைவரையும்
தீயாய் நின்று எரித்து விடு.



கவிஞர் ஸ்ரீவள்ளி, கோவை

# ஈழம்



மறக்க முடியா நிகழ்வு
மனம் வெம்பி போனது.
அரம்பர் கூட்டம் சூழ
அந்தியெது பகலெது
அறியா பதினெண் நாள்கள்.
காரிருள் சூழ விசும்பு
கலங்கி நின்றது.
போர் விழுங்கிய ஈழம்.

கவிஞர் செ. தமிழ்நேயன், தமிழ் நாடு

# அவள்

அவளுக்கென்ன பெரிதாய்
இருக்க போகின்றது என்று
தான் இங்கு பலரின்
எண்ணமாய் இருக்கிறது.

அவள்
இல்லற வாழ்வில் நுழைந்ததும்
அவள் கனவு எல்லாம் கண்கட்டி வித்தையே.
கலைந்து போனது கனவு அல்ல
அவள் வாழ்வின் ஆசைகள்.

சமையலறைக் கதவுகள்
அவளுக்கு புதிய எல்லைகளாய் மாறின
கணவனின் விருப்பங்களும்,
பிள்ளைகளின் எதிர்பார்ப்புகளும்
அவள் சுதந்திரத்தைச் சுருக்கின.

காலையில் கோலமிட்டு, மாலையில் விளக்கேற்றி,
இடைப்பட்ட நேரமெல்லாம் அடுப்படியிலேயே கழிந்தது.
அவள் கனவுகள் மிளகாய் வற்றலாய்,
புளிக்காய்ச்சலாய், மல்லிகைப்பூவாய் மட்டும்
சுருங்கிப் போனதை அவளே அறியவில்லை.

அடுப்பங்கரையே அவள் அரங்கம் ஆனது.
வெளியுலக வாசனை மறந்தே போனது.
கைப்பக்குவத்தில் கணவன் மனம் கவர்ந்தவள்,
காலத்தின் ஓட்டத்தில் கனவுகளைத் தொலைத்தவள்.

அவளின் கனவுகளஇறுதிவரை
ஓடும் மேகங்கள் போல் எப்பொழுதும்
கலைந்து கொண்டே தான் இருக்கும்.



கவிஞர் ரா. ரமேஷ், திருப்பூர்

# முப்பெரும் தெய்வங்கள்

"மாதா பிதா குரு தெய்வம்"
மறக்காமல் படி நீ தினமும்!
நாதா என்றே பாதம் தொழு!
நாவை அடக்கி நயனங்களால் அழு!
***


முன்னறி தெய்வங்களின்
முகவரியைப் படி!
முன்னேறிச் செல்ல
அவர்களின் கைகளைப் பிடி!
உன்னை அறியவைத்த
ஓதுவிப்பாரை ஓது!
ஓதா விட்டால் உனக்குயர்வு ஏது?
***

"குரு பார்த்தால் கோடி நன்மை"
கூறி டுவார் அது உண்மை!
கருமமே கண்ணாக
உன் கடமையோ பொன்னாக...!
மூவருமே உனக்கு முதற்படி!
***

தெய்வம் தந்த கோயில்கள்!
நடமாடும் இந்தத் தெய்வங்கள்!
மெய்யும் உயிரும் இவர்களே!
மேலான வேதங்கள் அவர்களே!
***

"கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன்!"
அத்தகையோரையும் கற்பித்தே
வெல்வோர் கணக்காயராம் குருமாரே!
கீழ்ப்படிவோடு அவர்கள் சொற்படி கற்பாயே!
***

எந்தப் படியிலே
நீ நிற்கிறாய் மகனே...?
ஏணிப்படியாகி ஏற்றப்படியிலே
அழைத்துச் செல்வோர் மூவரே!
அவர்கள் வழியிலே சென்றுபார்
உயர்நிலை அடைவாயே!
***



மனிதருக்குள் தெய்வங்கள்
மாதா பிதா குரு வடிவங்கள்!
முப்பெரும் தெய்வங்கள்!
மனதிலே பதித்து
மேதினியில் வெல்வாயே!

கவிஞர் விவேகவெளி தமிழேந்திரன், (சரவணமுத்து நவேந்திரன்), கிழக்கு மாகாணம்

# நல்குரவு

அதிகாரம் : 105



நல்குரவு

வறுமைபோல் துன்பமிழைப்பது
ஏதென்று வினவிட.
வறுமையே வறுமைபோல்
துன்பமிழைக்கும் ஒன்றாம்.

வறுமையெனும் பாவி
ஒருவனைத் தீண்டிட்டால்.
அவனுக்கிம்மையும் மறுமையும்
இன்பமே இல்லாதொழியும்.

வறுமையெனும் ஆசைநிலை
ஒருவனை பற்றிட்டால்.
குடிப்பண்பும் புகழும்
ஒருசேரக் கெட்டழியும்.

இழிச்சொல்பிறவா நற்குடும்பத்திலும்
அச்சொல் பிறக்க.
ஏதுவான சோர்வை
உண்டாக்கிடுமாம் வறுமை.

வறுமைத்துன்பம் ஒன்றினுள்ளே
வேறுபாடுள்ள பலதுன்பங்கள்.
சென்று சேர்ந்து
கொடுந்துன்பம் விளைந்திடுமாம்.

நன்னூற்பொருளை தெளிவாய்
எடுத்துரைத்திடினும் அஃதை.
வறுமைப்பட்டோர் உரைத்திடின்
கேட்பாரற்று பயனின்றிபோம்.

அறம்பொருந்தா வறுமையுடையோனை
ஈன்ற அன்னையும்.
அயலான்போல் கருதி
அவனைப் புறக்கணிப்பாள்.

நேற்றும் கொன்ற
வறுமைத் துன்பம்.
இன்றும்வந்திடின் எவரால்
என்னசெய்ய இயலும்.

மந்திரமருந்தின் துணையால்
எரிநெருப்பிலும் உறங்கலாம்.
வறுமைவந்துற்றால் எவ்வகையிலும்
கண்மூடி உறங்கலரிதாம்.

பொருள்நுகரும் திறனிலாவறியோர்
முற்றுந்துறத்தல் நலமாம்.
அஃதில்லையாகில் உப்பிற்கும்
கஞ்சிகுந்தாமே எமனாவதேயாகும்.

கவிஞர் ஆன்றனி ஜமுனா, நாகர்கோவில்

# மனம் சமரசம் செய்யும் நொடிகள்

துரோகம் செய்வதை
மறந்திடப் பழகு
இனிமையாய் பாசத்தின்
அரவணைப்பை உணர்ந்திடு

பயிற்சியில் ஆழ்ந்து
சிந்தித்திடத் துவக்கு
சிந்தையை ஒருமுகப்படுத்தி
நல்லதையே நினைத்திடு

சமரசம் உண்டாகும்
உள்ளமும் தெளிவாகும்
பழியுணர்ச்சியை அறவே
விட்டுவிடு இன்றே

அன்பை பகிர்ந்து
பண்பால் உயர்ந்திடுவோம்
இதயமும் இதமாகும்
இனிமையும் பெருகிடும்

நயம்பட உரைத்திட
தீமையது விலகிடும்
பந்தபாசங்களை இணைத்தே
அன்பைப் பரிமாறிடு

மனம் சமரசம்
செய்யும் நொடிகள்
நெஞ்சமும் களிப்புறுமே
நெகிழ்ந்து உறவாகுமே



நேர்மறை எண்ணங்களை
வண்ணமாக்கிடு வாழ்வில்
வானவில்லின் வர்ணமாய்
ஒளிர்ந்தே மிளிர்ந்திடு

பகையும் துரோகமும்
மாறிடும் மனிதா
சமரசநிலையில் இருந்திட்டால்
துயரேது உனக்கு

அமைதியும் ஆனந்தமும்
உருவாகும் அறிந்திடு
விவேகமான முடிவால்
குழப்பம் தீருமே

அகிலமும் உனதாகும்
கனவது நிறைவேறும்
ஏற்றமது உண்டாகிட
ஏக்கமும் மறைந்திடுமே.

கவிஞர் ப. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

# காத்திரு

என்ன நடந்தாலும்
உடைந்து போகாதே
உன்னை உடைப்பதற்கு
ஒரு தருணம் உண்டென்றால்
உன்னை உருவாக்குவதற்கும்
பல தருணங்கள் காத்திருக்கின்றன
இறைவன் தக்க தருணத்தை தரும் வரை
பொறுத்திரு காத்திரு.



கவிஞர் தேவி ராஜசேகர்

வனைவது யாவும்
வடிவம் பெறாது
விடாது தொடர்ந்திட
வசப்படாமல் போகாது

வந்தனம் செய்வார்
வாழ்வாங்கு வாழ்வார்
நிந்தனை செய்வார்
நிலையற்றே வீழ்வார்

நன்மை செய்வது
நல்ல பழக்கமே
நாளாந்தம் தொடர
நல்வாழ்வு துலக்கமே

ஆயுதம் எடுத்தால்
அமைதி அழியும்
ஆணியை எடுத்தால்
அறிவாறு பொழியும்

மண்ணின் பதம்
குயவனின் தேடல்
மனதின் பதமே
கருணையின் பாடல்

படைக்கப் படைக்க
பழகிடும் வேலை
செதுக்கச் செதுக்க
சிறந்திடும் படைப்பு




கவிஞர் மரூ ஜலீலா முஸம்மில், ஏறாவூர் (இலங்கை)

# போலியான உறவு



காரணமே இல்லாமல்
பேசிய உறவெல்லாம்
இப்போது,
பேசுவதற்கே காரணம் தேடுகிறது.
எல்லாம் பொழுதுபோக்குதான்
பேசினார்கள் என்பது,
நான் மௌனதில்
இருக்கும் போது தான் தெரிகிறது.
முகமூடி திருடனை கூட
முகத்திரை கிழித்தால் தெரியும்.
ஆனால்,
பன்முகம் கொண்டவர்களை
எதனை கொண்டு
கண்டுபிடிக்க முடியாது.
உள்ளுக்குள் வேஷம் போடுவார்கள்.
வெளியே பாசம் இருப்பவர் போல் நடிப்பார்கள்.
எல்லாம் போலியான உறவுதான்.

கவிஞர் மோனீஷா, தி. மலை



விளையாட்டாய்த் தான்
நானே விழுந்தேன்.
வலைத்தள சுழு நீர் சுனையில்;
சற்றே நீர் கிழித்து
நீந்தி விளையாடி
கரையேறி சேரலாமென்றே.
வலைத்தள வலையில்
மயங்கிச் சுருண்டேன்.
மாய வலையில்
உறங்கிக் கிடக்கிறேன்.

மெய்நிகர் வலையில்
கைதியாய் நான்
காணொளி காட்சி
காட்டும் நாடகம்,
புலனம் நித்தம்
பகிரும் சித்திரங்கள்,
உள் உணர்வில்லா
வாழ்த்துகளின் வினோதங்கள்
விசாரிப்புகள் விசாரங்கள்
மெய் நிகர் பொய்யின் உலகம்
பொய் முகம் காட்டும்
முகநூல் கிளர்வு

அந்தரங்கம் அம்பலமாகும்
அவலத்தின் இளிப்பு
பொய்மையோ எனத் தோன்றும் மெய்மை
உறக்கம் விட்ட இரவுகள்.
உலகம் மறந்த பகல்கள்.
செயல்பாடுகள் எல்லாம்
செயலியின் வழியில்

அலுவலகம் போகும்
அவசரம் எனக்கில்லை.
போக்குவரத்து நெரிசலில்
அவஸ்தை எனக்கில்லை
கணினி முன் அமர
படியளக்கும் சாமி
கண்முன் தோன்றும்.

அடிமையாய் இருப்பதிலும்
சுகமொன்று உண்டு
சுதந்திரம் கொடுத்து
சொகுசை வாங்கினேன்.
விடுதலை வேண்டேன்
விடு; என் சிறையில்
விரும்பியே இருக்கிறேன்.
இப்படி இருக்கக் கற்றுத்தேர்ந்தேன்

கவிஞர் சசிகலா விஸ்வநாதன்

# உணர்வில் ஜோதியானவளே!



மேற்கு மலைச்சாரல்  மேனியை நனைக்கும் மாலைத் தூறல்
மனதில் உந்தன் எண்ணத் தோரணங்கள்
இளைப்பாறுதல் இன்றி எழுந்து நிற்கின்றன.
என்ன செய்து என் பெயர் உரைப்பது?
விழிகளின் காந்தம்  புவிச்சுற்றைவிட வேகம் ஈர்க்கையில்
மொழிகளின் துணை முடமாகிப் போகிறது.
மனம் நனைக்கும் மழையை விட
எனை நனைக்கும் உன் நினைவு மேகம்.
எவற்றைப் பட்டியலிட்டு உன் முன் படைக்க?
அதிசயமாய் நிற்கும் உலகின் முன் அவசரமாய் எழும்பி
அடுத்த நொடி காணாமல் போய்விடும்
கனவு மாளிகைகளையா? எப்போதோ உயர்ந்துவிட்டு
இப்போதும் பெருமை அடிக்கும் இடுபாட்டுச் சின்னங்களையா?
விழியில் எழுந்து நொடிக்கு ஒரு முறை
கோடியாய்த் துடிக்கும் நெஞ்சை விட..
உன் மொழிக்கு ஈடாய் என்னிடம் ஏதுமில்லை.
கண்டுணரா மழலை மொழி காட்டி
காலத்தை கைக்குள் சிறையிடும் மழலையை விட,
உதிரும் பூக்களை உட்கார வைத்து
பேசும் தருணங்களில் பூமியில் விதைக்கும்
இதழ்களின் புன்னகையை விட..
வசீகரிக்க வாழ்வில்லாத வறட்சியிலும்
இல்லத்தில் முடக்கிவிட்ட இன்னல் சக்கரத்தின்
முடிச்சு மௌனங்களை விட. நாட்டின் நடை கண்டு
தம் தோளை முறுக்கேற்றி வீரத்தில் விளையும்
வர்க்க வைராக்கியங்களை விட, அரும்பில் திசை விரித்து
அலைக்கழிக்கும் காற்று அலை கடந்து  அன்பைப் பிரசவிக்கும்
மலரின் ஜனனத்தை விட, பிறப்பின் ரகசியம் பிதற்றாது ஆதாம் ஏவாளை
அள்ளிக் கொண்டு போய் அன்பின் வலை விரித்து அலையவிட்ட
ஆசை எண்ணங்களை விட, எனது தேடல் இன்னும் பெரிது.
மனதைக் கொய்ய  மான்விழிப் பார்வை வீசி
இதயம் பிடுங்கிக் கையில் கொண்டு
ஏதும் நடக்காத இளைப்பாறும் தோணியில்
அமைதியாய் உலவுகிறாய். உனக்கென்ன தெரியும்?
உன் பின்னே அலையாய் ஓடிவரும் என்னுயிர் பற்றி.
தீ வைத்து விட்டு நீராய் நகர்ந்து விட்டாய்.
அமைதி அலை காட்டி ஆழ்கடல் சிரிக்க
உள்ளே மையம் கொண்ட சூறாவளியாய்
கருணைப் பார்வைக்குள் காயமாக்கும் அம்புகள்.
உன்னைத் தேடும் ஒவ்வொரு துளியிலும்
உயிரைப் பிய்த்து தூது அனுப்புகிறேன்.
சேரும் துளிகளை அள்ளிப்பருகி சிறகில் வளர்ப்பாயா?
இல்லை சிந்தும் மழையில் சிதற விடுவாயா?
காதலின் யாகத்தில் காலமே நெய்யாய்
என் கானமே மெய்யாய் இன்னும் உன்னை நோக்கியே உயிரும் ஜோதியாய்.

கவிஞர் இளையவன் சிவா



என் ஒவ்வொரு நொடிகளையும்
சிறப்பாக நகர்த்திப்போக விழைகிறேன்

சில்லென்று ஊடுருவும்
உன் நினைவுகளோ
எளிதாக களவாடிவிடுகின்றன

கள்ள மௌனம் கொண்டு
கரைகிறேன் உன்னோடு

வேறென்ன
செய்துவிட முடியும் என்னால்

கவிஞர் முனைவர். இரா. இராஜமோகன், அயன் குறிஞ்சிப்பாடி

வழக்குகள் வேறாய், கனவுகள் ஆழம்,
மௌனத்தில் உரைக்கும் இசைதான் வாழ்வு.
விழிகள் பேசும் கதை புரிந்தால்,
வானம் சாயும் என் மனதின் மேல்!

அவர்கள் உலகம் வித்தியாசம் தான்,
ஆனாலும் அதில் இன்பம் நிலவாதா?
புரிதலால் மலரும் ஒளி ஒவ்வொன்றும்,
பிறர் பார்க்காத அழகை காணும் கண்கள் அவர்களுக்கு!



கவிஞர் ம. ஹரிஷ், பாலூர் (செங்கல்பட்டு மாவட்டம்)

அழகிய நிகழ்வு இல்லத்தின் நடுவே
விருந்தினர் அனைவரும் அமர்ந்திருந்தனர்
ஆண்கள் நாற்காலியிலும் பெண்கள் தரையிலும்
யாரும் சொல்லவில்லை இங்கு அமருங்கள்
அங்கு அமருங்கள் என்று அனைவரும்
தானாகவே அமருகின்றனர் இதுதான்
வாழ்வியலின் பாரம்பரியமா அல்லது
ஆதிக்கத்தின் வேரா இவற்றில்
சமத்துவம் அனைத்திலும் எவ்வாறு கடந்து செல்கிறது
பெண்களுக்கு சமவுரிமை எனக் கூறி
சமநிலை கற்பித்தவன் யாரோ



கவிஞர் முனைவர். அக. வீரவன்சாரா, சிதம்பரம்

# என் சுவாசம் நீதானே

விழிகளில் குதித்து
வித்தை காட்டும்
கெளுத்தி மீனின்
துள்ளலைக் கொண்ட
சலங்கைச் சிரிப்பு
காட்டும் சாகசம்
கற்பனையில் தோன்றி
கள்வெறி ஏற்றும்
கற்பூர வாசனை
தோற்கடித்த இதயவாணி!

வெடுக்கெனக் கொத்தும்
கொண்டைச் சேவலை
குப்புறத் தள்ளி
குலை நடுங்க
நின்று வீசும்
ரோசாப்பூ கொண்டைக்காரி!

உயிரில் உறவாட
கனவில் தேரரேறி
காற்றைச் சிறையெடுத்த
என்சுவாசம் நீதானே!



கவிஞர் யாழிசைசெல்வா, தேனி மாவட்டம்

# நெஞ்சினுள் ஒரு நேசம்



சொல்லாமல் நெஞ்சோடு
வைத்துக்கொள்ளும்
காதல் என்றும் அழியாது.

யாரிடமும் உலராமல்
கண்ணில் கண்ணீரோடு
நெஞ்சிக்குள் ஓரமாகாது.

யன்னல் கம்பி கடந்திடும்
பார்வையில் சுற்றி வளைத்து
தெரியும் காட்சிகள்
கண்ணுக்கு புலப்படாது.

யாரை சொன்னாலும்
அது நினைத்த உருவம் போல
அமையாது என்று
மனமும் உலரும் வேளை.

தென்றலோடு சேர்ந்து வரும் மணதோடு
நாசி தீண்டி தேடி பார்க்கும்
பிடித்த உருவத்தின் வாசத்தை.

பொய்யாகி போகாமல்
மெய்த்திடவே பிரார்த்திக்குமே.
புலரும் விடியலோடு
வளரும் எண்ணத்தை
பரீசீலனை செய்ய முடியாமல்
மனதோடு புதையும் காதல்
காலம் நகர்ந்தாலும் மறவாது.

கவிஞர் சுஹீனாஸ் பேகம், முதலைப்பாளி, புத்தளம்

பாரத நாட்டின் பகைவனவன் நமது
பாதத்தின் தூசிக்கும் சமமாக மீச்சிறுபுழுதி;
பாகிஸ்தான் என்றபெயர் கொண்டு புவிதன்னில்
பயங்கர வாதிகளை வளர்த்து விட்டு
புண்ணிய சீலன்போல போடுகிறான் வேடம்!

அடியவன் நானுமவனை ஆண்மை யுடையவனென
அநேக காலம் நினைத்து விட்டேன்;
அதுபொய்யென இப்போது ஐயமின்றி அறிந்துவிட்டேன்;
ஆண்மகனாய் இருந்திருந்தால் சுற்றுலா வந்தோரை
ஆயுதமின்றி சுற்றி திரிந்தவரை ஆயுதத்தால்
அழித்திருக்க மாட்டானவன் ஆண்மை தவறிவிட்டான்!




ஆண்வடிவில் இருப்போரெல்லாம் ஆண்களுமல்ல;
பெண்வடிவில் இருப்போரெல்லாம் பெண்களுமல்ல;
ஆண்வடிவில் இருந்தாலும் ஆயுதமற் றிருந்தோரை
ஆடையை அவிழ்த்து அடையாளம் கண்டு
ஆண்மக்களைச் சுட்டுக்கொன்ற தீவிர வாதிகளை
ஆணென்று சொல்லிட எந்தன் நாவும் கூசுகிறதே!



பைந்தமிழ்ப் புலவன் பாரதிபயின்றதைப் போல
பட்டங்கள் பயின்று பாரதம் காக்க
பயத்தினைப் பந்தாடி படையினராய் வலம்வரும்
பெண்களைக் காண்கையிலே பேதையேன் நெஞ்சம்
பெருமிதத்தில் துள்ளிக் குதிக்கிறது இடைவிடாது!

சிந்தூர் என்றபோர் நடவடிக்கையில் அச்சம்
சிறிதுமின்றி வீரத்துடன் பங்கெடுத்த இத்திருநாட்டின்
படைவீரர்களைப் பாராட்டி பலசொல் சொல்லிட
பாவலன் நான்நினைத்தாலும் சொல்பஞ்சமே காண்கின்றேன்!

வேற்றுமையில் ஒற்றுமையோடு வீரத்தையும் விவேகத்தையும்
வகைவகையாய் காட்டிட்ட முப்படைக்கும் முத்தமிழால்
வணக்கத்தோடு நன்றியையும் காணிக்கை ஆக்கினேன்;
வசீகரிக்கட்டும் அனைவரையும் எந்தன்கொடிதன் பட்டொளியாலே!

கவிஞர் தீந்தமிழ் திருமலைக்குமரன் அருணாசலம், கோவில்பட்டி

# பேருந்து பயணம்

எங்கோ பார்ப்பது போல்
என்னையே நோட்டமிட்டு
செல்லும் கள்விழிகள்
இன்னும் கொஞ்சம்
நீளாதாயென
ஏங்க வைக்கும்
அழகிய
பேருந்து பயணம்



கவிஞர் சி. நாகசுடர் இந்துமதி



வறண்டு வெடித்திருக்கும் நிலத்திலும் வேரூன்றி
விரிந்து மலர்ந்திருக்கும் மலர்ச்செடிகளை வாழ்விக்க
உற்றுகின்ற நீர் சிறிதளவே! ஆனாலும்
வேரில் நீர்சேரும் தாயின் பாசம்போல்!
திரண்டிருக்கும் மேகங்கள் பெய்யாமல் பொய்த்தாலும்
சிறுமியின் தாயுள்ளம் கருணைமழை பொழிகிறதே!
சிறுகரங்கள் நிகழ்த்துகின்ற வியத்தகு செயலின்பலன்
விரிந்து சிரிக்கின்ற மலர்களில் வெளிப்படுதே!
வாடிய பயிர்கண்டு வாடிய வள்ளலார்போல்
வாடாமல் செடிகளைக் காத்திடும் வள்ளளவள்!
வாழியவே பாவையவள் வளத்துடன் பல்லாண்டு!
அடுத்தவர் துயர்களைய துடித்திடுமே அன்புள்ளம்!
அன்புளம் கொண்டிருந்தால் அகிலமே தழைத்தோங்கும்
என்பதை உணர்த்திடுதே இப்படம் நமக்கெல்லாம்!
மனிதநேயம் மலரட்டும்! வன்முறைகள் அகலட்டும்!

கவிஞர் ஈ. சீ. சேஷாத்ரி

வண்ணங்களின் முழுமையான
முகவரியாய் திருவிழாக்கள்

சாலையோர வியாபாரிகளின் மகிழ்ச்சி
மாலைநேர புன்னகையாய்

தாவணிகளும் புடவைகளும்
சாலைகளில் தென்றலாய்

எல்லைச்சாமிகள் வெள்ளைப் பூசி
வெளிச்சமாய்

குலதெய்வங்கள் எல்லாம் குடும்பத்தின்
உறவுகளாய்

திருவிழாக்கள் என்றுமே உணர்வுகளின்
உற்சாகமாய்



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி

# அக்னி பகவான்



கோடையின் வெப்பம் வறுத்து எடுக்குது
*அக்னி பகவான்* கதகளி ஆடுது.

சாலையோர மக்களின் வாழ்வே வதங்குது
இருப்பவன் வாழ்வோ பனியா குளிருது.

ஏழையின் வாழ்வு தான் அனலாய் கருகுது
மழையும் வெயிலும்  இயற்கையின் விதிதான்
ஆனாலும் ஏழைக்கு எல்லாமே பாரம்தான்.

வெக்கையும் வேர்வையுமே வாழ்வாய் ஆனது
ஏழையின் வாழ்வு தான் கண்ணீரா ஆனது.

வீடு இல்லா மக்களின் வாழ்வு என்றும் சோகம்தான்
*ஓட்டப்படகாய்* ஒவ்வொரு நாளும் போராட்டம்தான்.

புயல் காற்றில் திசை மாறிய கப்பலின் நிலைதான்
என்றுதான் மாறுமோ ஏழையின் வாழ்வுதான்.

நம்பிக்கைதான் வாழ்க்கையென
நாட்களை நகர்த்துகிறோம்
எங்களின் வாழ்க்கையும் ஒரு நாள் வெல்லுமென.

கவிஞர் ஜேபி@பன்னீர்செல்வம், சேத்தியாத்தோப்பு



அகர முதல

வெண்ணிலவாய் விழிக்குள் நான்
விழித்தபோது நீயும் வந்தாய்!
ஒரே குடையின் இரு நிழலாய்,
வாழ்க்கை பாதை ஒன்றாய் நமதாய்.

தாய் காலடி நிழலில் வளர்ந்தோம்,
தந்தையின் கனவில் கனிந்தோம்.
தோளில் சுமந்த என் கனவுகள்,
உன் புன்னகையில் பிறந்தன.

நான் விழுந்த பொழுதெல்லாம்,
நீ உந்தியும் கண்ணீரும் ஆனாய்.
பரிசளிக்க ஒதுக்கினேன் உயிர்,
பரிதிக்க மறந்தாய் நீ என்னை!

உலகம் உனை உயர்த்த,
நான் நிழலாய் நகர்ந்தேன்.
ஆனால் உன் பாசம் ஓரமல்ல,
நாளும் அது உயிரோடு வாழும்.

என் உளத்தில் நீ ஒரு நிலா,
தெரியாமல்இரசிக்கிறாய் தினமும்!
வந்தாயா? என் வீதியில் மீண்டும்,
வாழ்க்கை பாடல் கேட்கவா நம்மூடே?

உறவுகள் ரத்தம் கேட்டாலும்,
உந்தன் பாசம் தான் என் வாழ்நாளின் வெற்றி!



கவிஞர் இ. தேவர்மன், இலங்கை

# மதிப்பு

தன் மேனியில்
தங்க ஆபரணங்கள்
தன் மதிப்பை
உயர்த்தி காண்பித்திட

தன்னலம் துறந்து
பிறர் நலம் நாடிடும்
நல் மனதும்
மதிப்புள்ளவைதானே?

இருளகற்றும்
ஒளி கொடுத்து
மதிப்பைக் கூட்டு.



கவிஞர் அ. சேவியர், கடலூர்

# நானும் நல்லவன்தான்



என் தவறு என் எதிரில் உள்ளவருக்கு
தெரியாத வரை

என் தவறை நான் மற்றவர்களிடம்
நியாயப்படுத்தாத வரை

நான் தவறு செய்ய என் எதிரில் உள்ளவர்கள்
எனக்கு வாய்ப்பு கொடுக்காத வரை

நான் அந்த வாய்ப்பை
ஏற்படுத்திக் கொள்ளாத வரை

நான் தவறு செய்ய மற்றவர்கள்
என் உணர்ச்சியை ஆசையை
தூண்டாத வரை

நானும் நல்லவன் தான்
எல்லோருடைய கண்களுக்கும்

தவறு செய்யாத மனிதன் இல்லை
தவறே செய்யவில்லை என்றால்
அவன் மனிதனே இல்லை

கவிஞர் புன்னகை தூரன் இரா. சங்கர், ஈரோடு

நீயெந்தன் மயிலானால்
நானுந்தன் மழையாகிறேன்

நெஞ்சைக் கொந்திப்
நேசத்தில் போனாயடி
வஞ்சியுந்தன் வாசத்தில்
வணிகம் செய்கிறேனடி



தஞ்சைக் கலசமாய்
தரணியில் நீயடி
கஞ்சாப்பூவாய்
கலாய்க்கும் போதையடி

பஞ்சாய் காதலில்
பற்றுகிறாய் என்னோடடி
நீயெந்தன் மயிலானால்
நானுந்தன் மழையாவேனடி

உள்ளத்தில் ஊறும்
உணர்வில் எறும்படி
வெல்லமாய் இனிக்கும்
தேனின் சுவையடி

அழகாய் ஆராதிக்கும்
ஆனந்தச் சிலையடி
எழுதிய ஏட்டுச்சுவடியாய்
பிணையாத வரமடி

கவிஞர் தமிழ்நதி கிருஷ் அபி, இலங்கை



அன்னையின் அன்பு அரும்பிய தழும்பே
பொன்னை மிஞ்சும் பொழுதின் கரும்பே
உலகில் உயர்ந்த உன்னத உயிரே
பலரின் நிறைவில் பரவல் பாசமே

கருணை உள்ளம் கனிந்தே வளரும்
வருணனின் பாசமாய் வசந்தம் வீசுமே
எண்ணிலடங்கா பணியை எமக்களித்த பெருமை
கண்ணிலே நீங்காத கடலான ஒளியே

ஏட்டில் அடங்கா இயந்திரம் தாய்மை
கூட்டில் வளர்த்த கூண்டுக் கிளியே
உடன் பிறந்த உற்ற சகோதரியும்
கடன்பட்ட நெஞ்சாய் காப்பாரே உரிமையில்

காற்றிலே கனிந்த காயாத துளியுமே
நாற்றாகி வளர்ந்தே நாளெல்லாம் சிறக்குமே
மனைவி என்பதன் மற்றொரு உயிரும்
துணையாய் நிற்கும் துடிப்பான உறவே

உற்றோர் உறவு உரிமையில் சிறக்குமே
மற்றொரு பிறவியில் மகனாய் பிறப்பேனே
சுற்றமும் சூழ்ந்தே வாழும் வாழ்வில்
கற்றலில் சிறந்த கனிந்த நட்பே

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

அகர முதல

# அன்பின் கரங்கள்

வாய்மையும் தூய்மையும் மானிடர்க்குச் சிறப்பு
சேயாய் பிறந்தும் செவிலியரின் சேவை நனிசிறப்பு
மகத்தான மருத்துவர்களுக்கு இதயத்துடிப்பு நீயே
அகப்புற நோயாளர்களுக்கு
நாடித்துடிப்பும் பார்த்திடுவாயே

வெள்ளைப் புறாவாய் உலவும் தேவதைகளே
எல்லையில்லா நோய்களோடு நிலவும்
யாக்கைகளுக்கு ஆற்றுவீர்
அரும்பெரும் சேவைகளையே
மருத்துவரில் பாதி நீயே
அருமையான பொறுமை கொண்ட தாதி நீயே
நோயின் தன்மையை மருத்துவருக்கு முன்பே சோதிப்பாய்
வாயைக் காத்தலில் நன்மையை போதிப்பாய்
ஊசியையும் வலிக்காமல் குத்துவாய்
பேசிப் பேசி மாத்திரையும் இனிக்குமென நீட்டுவாய்

உயிர் தழைக்க வைக்கும் உன் பேச்சு
உயிர் நோகும் நிலையிலும்
பிழைக்க வைக்க கதிர்வீச்சு
தெய்வம் தந்த மாற்று வரங்களே
செய்யும் சேவையில் அன்பின் கரங்களே



கவிஞர் குரு. ஜெயந்தி, சிதம்பரம்


# கிளி ஜோசியம்

சீட்டுக்குள் இருக்கும்
கடவுள்களுக்கும்
கூண்டுக்குள் இருக்கும்
கிளிகளுக்கும்
அவ்வப்போது
விடுதலை அளிக்கிறது
மனிதனின் எதிர்காலம்



கவிஞர் அன்னலட்சுமி சரவணன், ஈரோடு

# அழிவதும் அழியாததும்




மாறும் இயற்கை தன்னை அழிக்கும்;
மற்றொன்றாய்த் தானே பிறக்கும்
அழியும் இயற்கையில் அழிவில்லாதவை
ஐம்பூ தமெனும் கூறு மட்டுமே

உடல் அழியும் உயிர் அழிவதில்லை
பயிர் அழியும் மண் அழிவதில்லை
நகை அழியும் பொன் அழிவதில்லை
முகில் அழியும் வானம் அழிவதில்லை

வாசம் அழியும் காற்று அழிவதில்லை
நவீன விஞ்ஞானமும் வழிமொழிகிறது
எந்தப் பொருளும் அழிவதில்லை
வேதியல் உருமாற்றம் மட்டுமே

இறப்பில் நெஞ்சகம் மடிந்து அழியும்
கற்றகல்வி மட்டும் பிறவி தோறும் வாழும்
செய்த வினைகள் உலகில் அழியும்
செய்வினைப் பயன் மட்டும்
ஊழ்வினையாய்த் தொடரும்

தீக்காயங்கள் உடலின் காயங்கள் மட்டுமே
மனத்தில் மறையும்
தீதாம் பேச்சு நெஞ்சின் வடுக்களாய்
என்றும் உறுத்தும்
எனும் வள்ளுவர் வாக்கை நினைவில் போற்றுவோம்

பிறந்தவை எல்லாம் ஒரு நாள் இறந்திடும்
என்றும் இருந்தவை மட்டும் பின்னரும் நிலைத்திடும்
சைவ சித்தாந்தம் உரைக்கும் மெய்யியல் இதுவே
என்றும் நிலைப்பவை பதிபசுபாசம் மட்டுமே

அழிவது கொடுத்து அழியாதது அடைதல் சிறப்பன்றோ
அழியும் பொருள் கொடுத்திடு ; அழியாப்புகழ் பெற்றிடு
வாழும் வாழ்வில் அறம் சேர்த்திடு
வாழந்த பின்னும் நல்லூழ் பற்றிடு

கவிஞர் ஆ சு கந்தன், திருவொற்றியூர்



அகர முதல

# தெய்வத்தின் நிழல்

உடல் உயிர் உரு தந்து
என்னை ஈண்ட தாயே
நிலவென நான் மிளிர
இருள் பூண்டாய் நீயே

துயில் தொலைத்து நீயும்
துருபென இழைத்தாய் தேகம்
உணவின்றி நீயும்
உடல் மெலிந்தாய் நாளும்

கோடை வெய்யிலிலும்
குளிர்கால வேலையிலும்
துணையாக நீ நின்று
தூபமானவள் நீ அம்மா

நிஜமாக எனை ஈண்டு
நிழலாக பின் தொடர்ந்து
உயிர் வாழ நான் இன்று
உயிர் பிரிந்தாய் ஏன் அன்று

கரம் கொண்டு எனை காத்து
இடுபாட்டில் சிக்குண்டு
இனி தொடரா பயணமதை
இப்படிக்கு என்று முடித்தாயே



கவிஞர் பரிமளா மணி, இலங்கை

# கைபேசி காதல்

பேசிய
நீயும் நானும்
உறங்கிய பின்
பேசிக் கொண்டன
நம்மிரு கைபேசிகள்.

அவ்வப்போது
நேரம் கிடைக்கும்
போதெல்லாம் உன்னையே
நினைக்கிறேன்.
இப்போதெல்லாம்
நேரம் கிடைப்பதே இல்லை
உன்னை நினைக்காமல் இருக்க



கவிஞர் கோ. தினுசன். மட்டக்களப்பு (இலங்கை)

# அவசர உலகம்

நின்று பேசிட நேரமில்லையாம்
நிதானித்து உறவாடிட வழியில்லையாம்
இறைவனை நினைத்திட தோணவில்லையாம்
இன்முகம் காட்டிட இயலவில்லையாம்

கைகளில் பையுடனும் கால்களில்
சக்கரம் கட்டியவாறே ஓட்டமாம்
ஏனென்று கேட்டால் அவசரத்தில்
வந்திட்ட பணிச்சுமையாம்

குடும்பத்தினருடன் மனமகிழ்ந்து
கொஞ்சி குலாவிட இல்லாத நேரமதில்
குடியை நோக்கி ஓடிடுவர் குருடர்களாய்

அவசர அவசரமாய் சாலைகளில்
வாகனமதை இயக்கியே அவசரமாய் சென்று
சேர்கின்றனரே காலனிடமும்

அவசரத்தில் இழந்தனவற்றை அறியாது
அவனியில் ஆழ சிந்திக்கும் திறனறியாது
அவசரமாய் அகிலத்தில் வாழ்ந்து
அவசரமாய் மரித்துப் போகின்றனரே

தானத்தில் சிறந்த தானம் நிதானம்
என்று உணர்ந்திடுவோம்
அவசர உலகில் ஓர் நாளாவது
ஆரவாரமின்றி உலவிடுவோமே



கவிஞர் இரா. கோமதி, பொள்ளாச்சி

## அதற்காக

செய்தொழிலுக்கான
திறமை வளர்த்தலும்
வாழப்போகும் வாழ்க்கைக்கு
செல்வம் சேர்த்தலும்

புதிய விஷயங்கள்
அறியும் ஆர்வமும்
தொடர் வாழ்க்கைப் பயணத்தில்
அவசியமானவைதான்

அதற்காக இப்போது
உள்ளவற்றைபற்றி வருந்தவேண்டுமா?

*******

## வேண்டுமானால்

இன்றைய நிலையை
சில ஆண்டுக்கு முன்னால்
இருந்த நிலையோடு
ஒப்பீடு செய்து
நம்பிக்கை கொள்ளலாமே.

*******

## கொட்டி விடுங்கள்

தாங்க முடியா
சோகங்களுக்கும்
நடந்துவிடக்கூடாது
என்ற எதிர்கால பயத்துக்கும்



முயற்சித்தும்
கிடைக்கா வெற்றிக்கும்
எதிர்பார்த்தது நடக்காத
ஏமாற்றமும்

உடனடியாய் அத்தனையும்
கொட்டி விடுங்கள்
உறவிடத்தோ நட்பிடத்தோ
இறைவிடமோ
தனக்குத்தானோயோ

குறைந்த பட்சம்
தற்காலிக தீர்வாய்
மனம் லேசாகும்

பின்னர்
இருக்கவே இருக்கிறது
காரணமும் தீர்வும்
புத்தியின் காரியமாய்.

கவிஞர் சுந்தரராஜன், மானாமதுரை



நழுவி செல்வதில்
அவள்
குளியல் சோப்
***

ஒரு பெரிய மலையைப் பெயர்த்து முன்னிறுத்தி
இதுதான் என் பாசம் என்றால்
இது என்ன பெரிய விஷயம் என்பார்கள் பெண்கள்
***

எண்ணத்தை பொறுத்தே
கன்னம் அமையும்
***

ஒற்றை புள்ளி
சுற்றிலும் கோலம்
நெற்றிப்பொட்டு முகம்.
***

என் தங்கைக்கு குழந்தை பிறந்த உடன்
அன்னத்திற்கு மம் என்ற புனை பெயர்
எங்கள் வீட்டில்
***

உடலை
உடைத்து ஒடுக்கும்
ஜிம்னாஸ்டிக் பூனை
***

துரோகத்திற்கு தண்டனை இல்லை
பாசத்திற்கு உரியவர்களின்
அன்பு பரிசு அது
***

நைட் ஷிஃப்ட்
வேலையாட்கள்
ஆந்த பரம்பரை
***

நினைவுகளை தாண்டிய சொத்து
இந்த உலகில்
இல்லை
***

பிறருக்கான நேர விரயம்
பணத்தை விட
பெரியது

கவிஞர் சிரஞ்சீவி இராஜமோகன், கும்பகோணம்

பறக்க உனக்கு
அனுமதி எதற்கு
சிறகுகள் உனது
வானமோ பொது

நம்பிக்கை வட்டத்தின்
மையத்தில் வைத்தேன்
புன்னகை மாற்றாது
பூஜ்ஜியம் வரைந்தாய்

கோபம் கொதிக்கையில்
மௌனத்தை நாடுங்கள்
வாழும் நாட்களின்
இன்பத்தைத் தேடுங்கள்

ஓசையின்றிச் சிவக்கிறது
விடியலின் வானம்
மெல்ல எழுப்புகிறது
குயில்களின் கானம்



கவிஞர் ரவிஜி

# என் இனிய பள்ளி நாட்கள்



நினைக்கும் போது நொடியில் உள்ளம் உருகி
விழியில் ஆனந்த வெள்ளம் பெருகும்
என்னை விட்டும் பிரிந்து சென்ற
என் இனிய பள்ளி நாட்களை.

இருந்த போதும் அவ்வப்போது மீட்டிக் கொள்கிறேன்
என் நெஞ்சில் நிறைந்த அவ்வினிய
பள்ளி நாட்களின் பசுமையான நினைவுகளை.
இன்னும் என் இதயக்கரையோரத்தில் ஓயாது
அடிக்கும் அலைகளாய் அவ்வினிய நாட்கள்.

முதலாம் வகுப்பில் புள்ளிமான் போல்
துள்ளி விளையாடியதும்,
மூன்றாம் வகுப்பில் சிட்டுக்குருவி போல்
சிரித்து மகிழ்ந்ததும்
என் இனிய பள்ளி நாட்களில்.

ஆறாம் வகுப்பில் ஆங்கில அரிச்சுவடி பிழைத்ததால்
ஆசிரியரிடம் அடிவாங்கி அழுததும்,
கணித வாய்ப்பாட்டை கதிரையில் எழுதி
கள்ளப்பாடம் கொடுத்ததும்,

வகுப்பறையில் புழுக்கம் என்பதால்
வகுப்பறை வளாகத்தில் வான்மறைத்து நின்ற
வாகைமரநிழலில் வரலாறு பாடம் படித்ததும்.

பாடசாலையின் இடைவேளையில் சிற்றுண்டிச்சாலையில்
சகபாடிகளோடு கூடி மணமணக்கும் மாவுவடையை
மசமசக்கும் மாட்டிறைச்சி ஆணத்தோடு
தொட்டுத் தொட்டுண்டதன் சுவை இன்னும்
என் அடிநாக்கின் ஆழத்தில் தெவிட்டாமல் அப்படியே.

அவ்வப்போது சென்ற கல்விச் சுற்றுலாக்களும்
அதன் பசுமையான நினைவுகளும்
இன்னும் என் மனவானில் நில்லாது
பயணிக்கும் மேகங்களாய்.

இனி கண்ணீர் விட்டு கதறி அழுதாலும்,
கால் கடுக்க நின்று தொழுதாலும்
மீண்டும் மீண்டு வருமா..?
என் இனிய பள்ளி நாட்கள்.

கவிஞர் நபீல் இப்னு இஸ்மாயீல், நமடகஹவத்த, கலேவெல மாத்தளை

அத்தியாயம் 11

## என்ன வியாபாரம்?

(புதினம்)



"ஷிப்பிங் மற்றும் எக்ஸ்போர்ட்ஸ்" என்றவாறு தண்ணீர் குடித்தான் அரசு. கல கலவென்று சிரித்தான் திலக். ஒன்றும் புரியாமல் "ஏன் சிரிக்கிறீர்கள் திலக்" என்று கேட்டான் அரசு.

"அரசு ஷிப்பிங் அண்ட் எக்ஸ்போர்ட்ஸ் என்கிறீர்கள், முதலிலே இரண்டும் ஒன்றையொன்று தொடர்புள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள்.
ஷிப்பிங் என்றால் கப்பல் வியாபாரமா? அல்லது கப்பலுக்கு மால் சப்ளை பண்ணுகிற பிரைட் பார்வார்டிங் ஏஜெண்டா? அல்லது நாண் வாயேஜ் பில் ஆஃப் லேடிங் கொடுக்கிற கம்பெனியா? சொந்தக் கப்பல் ஆப்ரேட் பண்ணப் போறீங்களா? இன்னும் ஷிப்பிங்கில் எவ்வளவோ சொல்லிக்கொண்டு போகலாம்."

"அதே மாதிரி ஏற்றுமதி பற்றிச் சொன்னீர்கள் என்றால்? முதலில் என்ன பொருள் ஏற்றுமதி செய்யப்போகிறீர்கள்? யாருக்கு அனுப்பப் போகிறீர்கள்? பணம் எப்படி கிடைக்கும்? வெளி நாட்டில் யாரைத் தொடர்பு கொண்டு எப்படி லெட்டர் ஆப் கிரெடிட் போட்டு இம்போர்ட் எக்ஸ்போர்ட் கோர்ட் வாங்கி" என்று சொல்லிக்கொண்டே போனவனை"என்ன தான் சொல்ல வருகிறீர்கள்?" என்று இடை மறித்தான் அரசு.

"இது நான் செய்யப் போகிறேன், இதற்கு அடிப்படை தேவை இவை. இதனால் எனக்கு எத்தனை சதவிகிதம் லாபம் கிடைக்கும்?" என்று திலக் சொல்லிக் கொண்டே போக "முடிவாக என்னதான் சொல்கிறீர்கள்."

"நான் இதைச் செய்வேன் என்று முடியுங்கள்." , "இன்று இரவு முழுவதும் யோசிக்கிறேன்.", "தாராளமாக சிந்தித்து முடிவிற்கு வாருங்கள். உங்கள் சொந்த விஷயம்", "ஆனாலும் சில விஷயங்களை மிகவும் தெளிவாகச் சொல்கிறீர்கள்?"

''ஏன் தெரியுமா? முதலில் உங்களைப் போல்தான் நானும் ஏதாவது பிஸினஸ் பண்ண வேண்டும் என்று யோசித்துக் கொண்டேயிருந்தேனேயொழிய ... இதைத்தான் செய்ய வேண்டும் என்று முடிவு பண்ணாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

கவிஞர் இராஜகை நிலவன்

அத்தியாயம் 11

## என்ன வியாபாரம்?

(புதினம்)

ஆனால் இறுதியில் எனக்கு இது தெரியும்... என்னால் இது முடியும்... என்று உறுதி செய்த பிறகுதான் இதில் என்ன வருமானம் வரும்? என்ன செலவு? எவ்வளவு இலாபம்{நெட் பிராஃபிட்}வரும்? என்ன என்ன செய்ய வேண்டும்? என்று கணக்குப் போட்டு பார்த்து ஆரம்பித்தேன். அதே மாதிரி நீங்கள் என்ன செய்ய வேண்டும். என்று முடிவு எடுத்து வாருங்கள். அதன் பிறகு நிறை, குறைகளை நாம் அலசலாம். அதைச் செய்தால் என்ன லாபம் வரும் என்று கணக்குப் பார்க்கலாம்." என்று கேட்ட திலக் "என்ன சார், தூக்கம் வருதா?" என்று கேட்டான்.

"இல்லை திலக். என் தந்தை எந்த அளவிற்கு மூளையைப் பிழிந்திருப்பார் என்று யோசித்துப் பார்த்தேன்."
"சரிதான். ஆனால் அடிமட்டத்தில் ஆரம்பிக்கும்போதுதான் அந்தமாதிரி பிரச்சினைகள்,,, ஆரம்பித்த பிறகு வருமானம்... நிகர லாபம் வந்த பிறகு... அதைச் செய்து தருவதற்கு பணத்தை அள்ளி வீசினால், செய்து தருவதற்கு எக்ஸிகியூட்டிகளும் கன்சல்டேஷன்களும், நிறைய வந்து விடும்."

"அதுவும் சரிதான்." என்று சாப்பிட்டு முடித்து கையைக் கழுவினான். "அரசு வீட்டிற்கு போகலாமா? மாற்று உடை தருகிறேன். என் உடைகளை உடுப்பதில் தயக்கமில்லையே" என்றவன் உள்ளே போய் ஏற்றுமதி ஆர்டருக்கு தேவையானவைகளை சொல்லி விட்டு கீழே வந்து பைக்கை ஆன் செய்தான்.
"என்ன அரசு வாருங்கள் போகலாம். பைக்கில் வருவதாக இருந்தால் ஏதாவது பிரச்சினையா?" என்றான்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. அருகிலேதானே நடந்து போய்விடலாம் என்று நினைத்தேன்." என்று சொல்லி பைக்கில் அமர்ந்தான்.
வீடு வந்து உடையை மாற்றிக்கொண்டதும் பால் வந்தது. சூடு பண்ணி இருவரும் குடித்துக் கொண்டதும் "நீங்கள் அந்த அறையில் படுத்துக் கொள்ளுங்கள். தலையணை பெட்சீட் எல்லாம் இருக்கிறது.' என்று காட்டி விட்டு தூங்கப் போனான் திலக்.

படுக்கையில் அமர்ந்தவன் கழற்றிப் போட்ட சட்டைப் பையிலிருந்து கிழிந்த பகுதியை வாசிக்க ஆரம்பித்தான்.

தொடரும்...

கவிஞர் இராஜகை நிலவன்

# கட்டுரை

**வாழ்க்கை குறிப்பு:**

காலம் - 07.02.1902 - 15.01.1981
பெற்றோர் - ஞானமுத்து, பரிபூரணம் ; ஊர் - சங்கரன்கோவில்
கல்வி - பண்டிதர், புலவர், வித்துவான், முதுகலைத் தமிழ், பிஓ.எல்.,
சிறப்பு : செந்தமிழ்ச்செல்வர், செந்தமிழ் ஞாயிறு ,தமிழ்ப் பெருங் காவலர் என சிறப்புப் பெயர்கள்

**தமிழ்பற்று:**

தன்மை மோதிய மிதிவண்டிக்காரர் கூறிய மன்னித்து கொள்க என்ற சொல்லை, மன்னிப்பு உருதபச்சொல், பொறுத்துக்கொள்க என தமிழில் சொல்லவும் என்று கூறி, மிதிவண்டிக்காராரையும் சொல்லச் செய்தவர்.

**தமிழை மீட்டல்:**



மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் தனித்தமிழ் ஊற்று; செந்தமிழ் ஞாயிறு; இலக்கியப் பெட்டகம்; இலக்கணச் செம்மல்; தமிழ்மானங் காத்தவர்.
உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேறும் தமிழ்; திராவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வுசெய்து நிறுவியவர்.


உலகின் முதல் மாந்தன் தமிழன்; தமிழன் தோன்றிய இடம் குமரிக்கண்டம்" என்பதும் மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழர் நாகரிகமே என்பதும் அவரது ஆய்வின் இரு கண்கள். "தமிழை வடமொழி வல்லான்மையில் இருந்து மீட்பதற்காகவே இறைவன் என்னைப் படைதான்" என்று கூறினார்.

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

### அனைத்தும் தமிழில்:

கோவில்களில் தமிழில் வழிபாடு நடைபெற வேண்டும் என்றார். பிறப்பு இறப்புத் தொடர்பான சடங்குகள் யாவும் தமிழில் நடைபெறவேண்டும் என்றும் பாவாணர் வலியுறுத்தினார்.

### பாவாணரின் படைப்புகள்:




- தமிழ் வரலாறு
- முதல் தாய்மொழி
- தமிழ்நாடு விளையாட்டுகள்
- தமிழர் திருமணம்
- வடமொழி வரலாறு
- தமிழர் மதம்
- மண்ணிலே விண்
- பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்
- உயர்தரக் கட்டுரை இலக்கணம்
- சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
- திருக்குறள் மரபுரை

### அகரமுதலி:

பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக 08.05.1974 அன்று பணியமர்த்தப்பட்டு, அரசின் உதவியோடு சில தொகுதிகளை வெளிக்கொணர்ந்தார். இருநூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

### தன்மானம் மிக்கவர்:

தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்றஇயலாத சூழல் நேர்ந்தபோது, "எனக்கு வறுமையும் உண்டு; மனைவிமக்களும்


திரு.அ.வில்சன், இதழாசிரியர்

கட்டுரை

**தன்மானம் மிக்கவர்:**

தாம் பணியாற்றிய கல்வி நிறுவனமொன்றில் தொடர்ந்து பணியாற்றஇயலாத சூழல் நேர்ந்தபோது, "எனக்கு வறுமையும் உண்டு; மனைவிமக்களும் உண்டு; அவற்றோடு மானமும் உண்டு" என்று வெளியேறினார்.

**சிறப்புகள்:**



பாவாணர் பெயரில் சென்னை அண்ணாசாலையில் நூலகம் செயல்பட்டு வருகிறது. இவர் படித்துப் பணியாற்றிய இராசபாளையத்திற்கு அருகிலுள்ள முறம்பில், பாவாணர் கோட்டம், அவர்தம் முழு உருவச்சிலை, அவர் பெயரில் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன.

**தமிழன்னைக்கு பெருமை:**

மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, "மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்கு பெருமை சேர்த்தார்.

நன்றி
https://tnpsctamilnotes.blogspot.com/p/blog-page_79.html

திரு. அ. வில்சன், இதழாசிரியர்

நாளை

# நடமதே

## எதுவாக இருந்தாலும் சரி

## மூழ்கிவிடாதே

## மிதக்க கற்றுக்கொள்

**அகர முதல இலக்கியப் பேரவை**

அகமும் தமிழே  முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில,

அகர முதல செய்திக்குழு  அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு  சிவம் அறக்கட்டளை

தொடர்பிற்கு :

9597887847
8870884969



## அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa  www.aagaramuthala.com  aagaramuthala@gmail.com